**செய்தி வெளியீடு எண்: 282** **நாள் : 10.06.2016**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க 10.06.2016 இன்று சேப்பாக்கம் வேளாண்மைத் துறை அலுவலகத்தில், வேளாண்மை, வேளாண் பொறியியல், தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் ஆகிய துறைகளின் திட்டப் பணிகள் குறித்து மாவட்ட அளிவிலான வேளாண்மை, பொறியியல் மற்றும் தோட்டக்கலைத் துறைகளின் இணை இயக்குநர்கள், செயற்பொறியாளர்கள் மற்றும் துணை இயக்குநர்கள் ஆகியோருடனான ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு இரா.துரைக்கண்ணு அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், கடந்த ஐந்து ஆண்டுகளில், நான்கு முறை உணவு தானிய உற்பத்தி 100 இலட்சம் மெட்ரிக் டன்களை கடந்து சாதனை எட்டப்பட்டுள்ளது. இதற்குச் சான்றாக மத்திய அரசு மூன்று முறை கிரிஷி கர்மான் விருது வழங்கி தமிழகத்தின் சாதனையை அகில இந்திய அளவில் உறுதி செய்துள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில்தான் இரண்டாவது பசுமைப் புரட்சி படைத்திடும் வகையில் இரு மடங்கு உற்பத்தி மும்மடங்கு வருமானம் என்ற தாரக மந்திரத்துடன் வேளாண்மை ஒரு மாபெரும் புரட்சியை ஏற்படுத்திக் கொண்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், வாழை சாகுபடியில் 1,18,000 எக்டர் பரப்பில் சாகுபடி மேற்கொண்டு 56.5 இலட்சம் டன் உற்பத்தியுடன் இந்தியாவிலேயே தமிழகம் முதலிடத்தில் உள்ளது. இதேபோன்று மரவள்ளி பயிரில் 1,20,000 எக்டர் பரப்பளவில் பயிர் செய்து 47.75 இலட்சம் டன் உற்பத்தியுடன் தமிழகம் முதலிடத்தில் உள்ளது. மலைப்பயிர்கள் உற்பத்தி தேங்காய் உற்பத்தி மற்றும் உதிரிப்பூக்கள் உற்பத்தி ஆகியவற்றில் தேசிய அளவில் தமிழகம் முன்னிலையில் உள்ளது.

பூக்கள் மற்றும் கோகோ சாகுபடி பரப்பு இந்தியாவிலே தமிழகத்தில் தான் அதிகமாக உள்ளது. இதுபோன்று உற்பத்தித்திறனை காணுகையில் ஒட்டு மொத்த பழங்கள் உற்பத்தி, பப்பாளி, மாதுளை, சப்போட்டா, காய்கறிகள், மரவள்ளி ஆகியவைகளில் தமிழகமே முதலிடத்தில் உள்ளது.

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பொற்கரங்களால் 1995 ஆம் வருடம் உதகையில் உருவாக்கப்பட்ட அரசு ரோஜா பூங்கா உலகப்புகழ் பெற்றது. இப்பூங்காவிற்கு ஆகியாவிலேயே **சிறந்த ரோஜா பூங்கா** என்ற விருது ஜப்பானில் அமைந்துள்ள ரோஜா சங்கத்தால் விருது கிடைக்கப்பெற்றுள்ளது.

இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தை முதன்மை மாநிலமாக உருவாக்கும் வண்ணம் தேசிய அளவில் முன்னோடித் திட்டமாக எந்த ஒரு மாநிலத்திலும் நடைமுறையில் இல்லாத நிலையில் நுண்ணீர்பாசன கருவிகள் 100 சதவித மானியத்தில் தமிழகத்திலுள்ள சிறு/குறு விவசாயிகளுக்கு வழங்கி வருகிறார்கள்.

2011–12ம் ஆண்டு பெருநகர காய்கறி தொகுப்பு அபிவிருத்தி திட்டத்தில் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் ரூ.17.00 கோடி நிதியில் துவக்கிவைக்கப்பட்டு, தமிழகத்தில் சென்னை பெருநகரத்தை மையமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம் கோவை, திருச்சி, சேலம், மதுரை மற்றும் கிழக்கு கடலோர மாவட்டங்கள் ஆகிய தமிழகத்தின்

அனைத்து பகுதிகளுக்கு விரிவுபடுத்தப்பட்டதின் காரணமாக தமிழகம் காய்கறி உற்பத்தித்திறனில் தேசிய அளவில் முதலிடத்தை அடைந்துள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் டெல்டா மாவட்ட விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் குறுவை சாகுபடித் தொகுப்புத் திட்டத்தினை ரூபாய் 54.65 கோடி முழு மானியத்தை அறிவித்து செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் திட்டம், நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டு, அதன் முழு பலனும், அனைத்து டெல்டா மாவட்ட விவசாயிகளின் நலனை காக்கும் வகையில் செயல்படுத்தப்பட வேண்டும்.

இதற்காக, அனைத்து சகோதரத் துறையிலும் உள்ள எல்லா நிலை அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட்டு, அனைத்துத் திட்டங்களுக்குமான பயனாளிகளை தெரிவு செய்து முன்னுரிமை அடிப்படையில் பரிசீலிக்க வேண்டும்.

மின் ஆளுமைத் திட்டத்தின் கீழ் அனைத்து விரிவாக்க மையங்களிலும் கணினி மற்றும் இணைய தள வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனை, முழுமையாகப் பயன்படுத்தி அனைத்து விவசாயிகளுக்கும் மின்னணு இரசீது வழங்க வேண்டும். அவ்வாறு இடுபொருட்கள் வழங்கப்படும் விவரங்கள் விவசாயிகளின் கைப்பேசிக்கு குறுஞ்செய்தியாக செல்வதை அந்தந்த வேளாண்மை உதவி இயக்குநர்கள் உறுதி செய்ய வேண்டும்.

திட்டங்கள் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்த உரிய விளம்பரங்கள் செய்தல், உதவி வேளாண்மை அலுவலர்கள் தங்களின் பயணத்திட்டப்படி குறிப்பிட்ட நாட்களில், அந்தந்த கிராமங்களுக்குச் சென்று தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்குதல், திட்டப் பயனாளிகளின் பட்டியல்களை, வலைதளத்தில், அவ்வப்போது பதிவு செய்து, அதனை மேற்பார்வை அலுவலர்கள் பார்வையிட்டு, அதன் உண்மைத் தன்மையை உறுதி செய்தல் , திட்ட செயலாக்கம் வெளிப்படையாக இருத்தல் வேண்டும்.

மேலும், திட்டங்களின் மூலம் விநியோகிக்கப்படும் இடுபொருட்கள், தரமானதாக இருக்க வேண்டியதுடன், உரிய நேரத்திலும் விநியோகிக்கப்பட வேண்டியது அவசியம் என்பதையும் நுண்ணீர்ப் பாசனம், வேளாண் கருவிகள் விநியோகம், போன்ற அதிக மானியத் தொகை கூடிய திட்டங்கள் செயல்படுத்தப் படும்போது பயனடைந்த விவசாயிகள் அதனைத் தொடர்ந்து உபயோகிக்கின்றார்களா என்பதையும் கண்காணிக்க வேண்டும் என்றும் தரமான விதைகள், போதிய அளவிலான உரங்கள், தேவையான பூச்சிக்கொல்லி மருந்துகள் ஆகியவை போதுமான அளவில் தேவையான நேரத்தில் விவசாயிகளுக்கு மிக அருகாமையில் கிடைப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

இக்கூட்டத்தில், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் திரு ககன்தீப்சிங்பேடி, இ.ஆ.ப., முதன்மைச் செயலாளர் / வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை ஆணையர் மற்றும் தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை ஆணையர் திரு ஷம்பு கொல்லேளிக்கர், இ.ஆ.ப., வேளாண்மைத்துறை ஆணையர் முனைவர் மு. ராஜேந்திரன், இ.ஆ.ப., வேளாண்மைப் பொறியியல் துறை தலைமைப் பொறியாளர்கள், திரு வி.தெய்வேந்திரன் மற்றும் திரு மணி ஆகியோர்களுடன் வேளாண் துறையின் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**